Registered as a News Paper in [illegible] பக்கங்கள்: 08 விலை ரூபா 5.50

# ஈழநாதம்

THE EELANAATHAM Weekly வெள்ளி மஞ்சரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 10 (26 - 07 - 1991) வெள்ளிக்கிழமை ஓசை: 158

## ஒரு கொத்தணிக்கு இரு அதிபர்கள்

(நல்லூர்)

கோண்டாவில் கொத்தணியில் இரு அதிபர்கள் கொத்தணி அதிபருக்குரிய கடமைகளை ஆற்றி வருகிறார்கள். இவர்களில் முதலாமவருக்குரிய கொத்தணி அதிபர் நியமனக் கடிதம் வட-கிழக்கு மாகாண அமைச்சின் செயலாளரினால் வழங்கப் பட்டுள்ளது. கடிதத்தில் குறிப்பிட்ட அதிபரை நியமனம் செய்து கொத்தணி அதிபராக நியமிக்கும் உரிமை வட-கிழக்கு (8 ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல் தீர்வைக் கண்டறிய

# பாராளுமன்ற தெரிவுக் குழு

## எதிர்க்கட்சியின் பிரேரணையை அமைச்சரவை அங்கீகரித்தது

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பது தொடர்பான தேசியப்பிரச்சினையில் அரசியல் தீர்வு காண்பதற்கு பாராளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட வேண்டும் என்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மங்கள முனசிங்காவின் தனிநபர் பிரேரணையை சிறிலங்கா அமைச்சரவை ஆதரித்துள்ளது.

இதனை நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள முனசிங்கா சமர்ப்பித்திருக்கும் தனி நபர் பிரேரணைக்கு முழு ஆதரவு அளிக்க அமைச்சரவை தீர்மானித்திருப்பதாக கூறினார்.

திரு மங்கள முனசிங்கா சமர்ப்பித்த பிரேரணைக்கு இசைவாக வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதற்கு சம்பந்தப்பட்ட தேசியப் பிரச்சினையில் அரசியல் தீர்வு காண்பதற்கு பாராளுமன்ற (8 ஆம் பக்கம் பார்க்க)

## காவலரண்கள் மீது ரொக்கட் தாக்குதல்

[இயக்கச்சி]

ஆனையிறவு இராணுவ முகாம் காவலரண்கள் சிலவற்றின் மீது நேற்று மாலை விடுதலைப் புலிகள் ரொக்கட்தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதல் நேற்று பிற்பகல் 2 30 மணியளவில் இடம் பெற்றது.

இத்தாக்குதலில் சில காவலரண்கள் பலத்த சேதமடைந்தன. இராணுவத் தரப்பில் சிலர் கொல்லப்பட்டிருக்கலாம் அல்லது காயமடைந்திருக்கலாம் எனவும் தெரியவருகின்றது.

## நேபாம் குண்டுவீச்சால் சந்தை தீப்பற்றியது

[இயக்கச்சி]

இயக்கச்சி சந்தைப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் நான்கு மணியளவில் நேபாம் குண்டு வீச்சினால் சந்தையின் பின்புறத்தில் பெரும் தீ பற்றிக் கொண்டுள்ளது முன்னிரவுப் பகுதிவரை தீ தொடர்ந்து எரிந்து கொண்டிருந்தது. மேலும் சில நேபாம் குண்டுகளும் இப்பகுதியில் வீசப்பட்டதோடு மேலும் பல விமானக் குண்டு வீச்சுக்களும் நடைபெற்றது. ஏற்கனவே நடைபெற்ற குண்டு வீச்சுக்களினால் பலத்த சேதமடைந்திருந்த பாடசாலை உட்பட பல வீடுகளும், தென்னந்தோப்புகளும் இப்பகுதியில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும் இப்பகுதியினூடாக 33,000 கே. வி. மின்சாரத்தை கடத்தி வந்த மின்கம்பிகள் ஆங்காங்கே அறுந்து தொங்கி கிடக்கக் காணப்படுகின்றன. இத்தகைய லக்சபானா மின் கோபுரமொன்று இடை நடுவில் வளைந்து தரையைத் தொட்டுக் கொண்டு நிற்கின்றது.

## ஐந்து கடற்படையினர் பலி; நெடுந்தீவு கடலில் மோதல்

### புலிகளின் தாக்குதலில் படகு மூழ்கியது

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் நெடுந்தீவு கடலில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா கடற்படையினருக்கும் மத்தியில் நிகழ்ந்த மோதலில் 5 கடற்படையினர் கொல்லப்பட்டனர். இறந்த கடற்படையினரின் சடலங்கள் நேற்று புங்குடுதீவு கடலோரம் கரை சேர்ந்தன.

கடற்படையினரின் படகு மீது புலிகள் தீவிர தாக்குதலை நடத்தியதாகவும் இதனால் படகு கடலில் மூழ்கியதாகவும் தெரியவருகிறது.

புங்குடுதீவில் கரை சேர்ந்த படையினரின் உடல்கள் அழுகிய நிலையில் இருந்ததால் மக்கள் அவற்றை தகனம் செய்தார்கள்.

## காயமடைந்த சிங்களச் சிப்பாய்க்கு யாழ். மருத்துவமனையில் சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்டு யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் சிறிலங்கா சிப்பாயைச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் நேற்றுச்சென்று பார்வையிட்டனர்.

கடந்த 21 ஆம் திகதி கட்டைக்காடு வெற்றிலைக்கேணி பகுதியில் நடைபெற்ற மோதலின்போது காலியைச்சேர்ந்த உபாலி (24) என்ற பெயருடைய சிங்களச் சிப்பாய் காயமடைந்த நிலையில் புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்டார் இவர் பின்னர் சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்திய (8 ஆம் பக்கம் பார்க்க)

கடந்த பதினைன்காம் திகதி

## ஆனையிறவு - கட்டைக்காடு மோதலில் வீரமரணமானோர்

(நமது நிருபர்)

ஆனையிறவு முகாம் முற்றுகைப் போரிலும், கட்டைக்காட்டில் தரையிறக்கப்பட்ட இராணுவத்தினருடனும் ஏற்பட்ட மோதல்களிலும் கடந்த 14 ஆம் திகதி வீரமரணமடைந்த போராளிகளின் விபரம் வருமாறு.

★ லெவ் (துரைசிங்கம் இராஜசேகர் ஈ. எஸ். பெர்னாண்டோ மாவத்தை கொழும்பு)

★ சோலை (சந்தியாப்பிள்ளை கிறிஸ்ரி எஜேந்திரன் 4 ஆம் குறுக்குத் தெரு பருத்தித்துறை) (2 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் சென்றடையும் நாளைக் கூறமுடியாது

- வால்டர் பெர்னாண்டோ

(கொழும்பு)

கட்டைக்காட்டிலிருக்கும் இராணுவத்தினர் எப்போது ஆனையிறவைச் சென்றடைவர் என்பதைத் தம்மால் உறுதியாகக்கூறமுடியாது என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர் வால்டர் பெர்னாண்டோ கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் தேசிய அவர் மேலும் ஆனையிறவு இராணுவ முகாமைக் கைப்பற்ற தற்கொலைப் படைப் பிரிவையும் புலிகள் (8 ஆம் பக்கம் பார்க்க)

## உணவுக் கப்பல் இன்று பருத்தித்துறை வருகிறது

(யாழ்ப்பாணம்)

நீண்டகால இடைவெளிக்கு பின்னர் அத்தியாவசிய உணவுப்பொருட்களுடன் கப்பல் ஒன்று திருக்கோணமலையிலிருந்து இன்று பருத்தித்துறை வந்துசேருமென சர்வதேச செஞ்சிலுவை வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்தில் சில பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து இனிமேல் வழக்கம்போல் உணவுக்கப்பல்கள் பருத்தித்துறைக்கு வருமென இவ் வட்டாரங்கள் கூறின.

## இலங்கைத் தமிழரைத் திருப்பி அனுப்பக் கூடாது

- கிருஷ்ண ஐயர்

(சென்னை)

ஈழத் தமிழர் பிரச்சினைக்கு ஒரு உடன்பாடு எட்டப்படும் வரை தமிழகத்தில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழரைத் திருப்பியனுப்பக்கூடாது என்று இலங்கை - இந்திய நட்புறவுச் சங்கத்தின் தலைவரும், இந்தியாவின் முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதியுமான வி. ஆர் கிருஷ்ண ஐயர் விடுத்த அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவ்வறிக்கையில் தாயகம் திரும்பும் அகதிகளின் நலன்களைக் கவனிக்கும் (8 ஆம் பக்கம் பார்க்க)

போராளிகள் நலம் பெற வேண்டி
நல்லூர் / நாயன்மார்கட்டு
அரசடிப்பிள்ளையார் கோயிலில்

## விசேட அபிஷேகமும் திருவிழாவும்

### இன்று 26-7-91 வெள்ளிக்கிழமை

ஆனையிறவு வெற்றிலைக்கேணி, முள்ளியான், புல்லாவெளி யுத்தமுனைகளில் எதிரியுடன் தீரமுடன் போரிட்டுக் கொண்டிருக்கும் போராளிகளுக்கு ஆத்ம பலம் கிடைக்கவும் வீரமரணம் அடைந்த வேங்கைகளுக்கு ஆத்மசாந்தி வேண்டியும் காயமடைந்த போராளிகள் நலம் பெற வேண்டி பிரார்த்தனை நடத்தவும் மேற்படி கோயிலில் இன்று பிற்பகல் 3-30 மணியளவில் அபிஷேகமும், 5-00 மணியளவில் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (R/1579

# யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

**நல்லூர் கந்தசுவாமி கோயில் 1991ஆம் ஆண்டு மகோற்சவ கால தற்காலிக சந்தைகள்:**

01. நல்லூர் இந்து விடுதிக்கு அருகாமையிலும்
02. பண்டார மாளிகை வளவில் தியணைக்கும் சேவை நிலையத்திற்கு கிழக்குப் பக்கமாகவும்.

நிலம் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 09 - 08 - 1991 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்படிவக் கட்டணமாக ரூபா 50/-ஐயும், மீளளிக்கப்படக் கூடிய கேள்விப் பிணையாக ரூபா 250/-ஐயும் செலுத்துவதன் பேரில் 7 - 8 - 91ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 3-00 மணிவரை மாநகராட்சி மன்றத்தினால் வழங்கப்படும் கேள்விப் படிவங்களில் (இணைப்பிரதிகளில்) கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் 09-08-1991 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்குப் பிந்தாமல் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது பதிவுத் தபால் மூலம் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும். தபாலில் அனுப்பப்படும் போது தபால் விநியோகத்தில் ஏற்படும் தாமதங்களுக்கு சபை பொறுப்பேற்க மாட்டாது.

இக்கேள்விகள் சம்பந்தமான சகல விபரங்களையும் யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் நானாவித இறைவரிப்பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
24-07-1991.

(B/8256)

# ஆண் தாதியாளர் தேவை

தனியார் நிறுவனமொன்றில் தாதியாகப் பணிபுரிவதற்கும், நோயாளர்களைப்பராமரிப்பதற்கும் தாதிகள் தேவை.

★ வயதெல்லை: 30 வயதுக்கு மேல்.
★ புதிதாகச் சேர்பவர்களுக்கும் பயிற்சி வழங்கப்படும்
★ நியாயமான ஊதியம் வழங்கப்படும்.
★ உடன் நேரில் தொடர்பு கொள்ளவும்;

முகவரி:
பாலம் பொதுப்பணித் தொடர்பகம்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (B/2858)

## வரி விளம்பரம்

**அனித்தா பயிற்சி வகுப்பு**

விஞ்ஞானமுறைப்படி உடை தையரித்தல். சிகை அலங்காரம் Hair Style, Cake Icing General Cookery, Bridal Make-up Flower making Interior Decoration அனித்தா பயிற்சி நிலையம், பூநாறி மரத்தடி, யாழ்ப்பாணம். (B/2849)

**தவறிவிட்டது**

10-7-91 ஒமந்தையில் டவுன் புரண்டதில் P.P பாக் ரவலிங் பாக் சேலைகளுடன், ஒரு கைப்பையும் அடையாள அட்டையுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் அல்லது மாறி எடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் அல்லது இல. 9பிரவுண் வீதி, யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும் (R/1577)

## பண்ணிசைப் போட்டியில் முதலாம் இடம்

யாழ். கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய மாணவன் ம. பிரபாகரன் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற கோட்ட மட்டத்திலான பண்ணிசைப் போட்டியில் கனிஷ்ட இடைநிலைப்பிரிவில் முதலாம் இடத்தையும் குழுப்பாடலில் 2ஆம் இடத்தையும் பெற்றுள்ளார்.

## வெற்றிவேண்டிப் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

★ களத்தில் இருக்கும் போராளிகளின் நலன் வேண்டி யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீ அரசடிப் பிள்ளையார் கோயிலில் இன்று (26-07-91) மாலை 3 30 மணி தொடக்கம் 6 00 மணி வரை விசேட அபிஷேக பூசை உற்சவமும் கூட்டுப் பிரார்த்தனையும் இடம் பெறவுள்ளது.

இதே நேரம் சித்தன்கேணி பிள்ளையார் கோயிலிலும் போராளிகளின் நலன் வேண்டி சங்காபிஷேகம் நடைபெறும்.

**நகரசபைகள், பிரதேச சபைகள், சனசமூக நிலையங்கள்**

நகரசபைகள், பிரதேச சபைகள், ஆகியவற்றைச் சேர்ந்த சகல ஊழியர்களையும், சனசமூக நிலையங்களின் நிர்வாகக் குழுவினர்களையும் எனது காரியாலய ஊழியர்களையும் 27-07-91 (சனிக்கிழமை) அன்று காலை 10-00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் சந்திக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

சு. டிவகலாலா
உள்ளூராட்சி
உதவி ஆணையாளர்
(B/2857)

ஆனையிறவு
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ வரன் (சரவணமுத்து ரவிச்சந்திரன் 42 மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம்)
★ சந்திரநாயகி (வடிவேலுசிவமலர் இளாலி எழுதுமட்டுவாள்)
★ அன்புதாஸ் (மாணிக்கம் துஷ்யந்தன் கன்னியபுரம்வேர்மலை திருமலை)
★ தாஸன் (பாலசுந்தரம் முரளீதரன் தண்ணீரூற்று முள்ளியவளை)
★ குசோக் (தியாகராசா திருபாகரன் தெல்லிப்பளை காங்கேசன் துறை)
★ டொமினிக் (அருள் ஆனந்தராசா திருவையாறு கிளிநொச்சி)
★ நளினி (இரத்தினராசா கோகிலா உரும்பராய் வடக்கு உரும்பராய்)
★ சந்திரா (செல்வராசா மல்லிகா மகிழங்குளம் வவுனியா)
★ கடர்ரோன் (நடராசா ஜெகதீஸ்வரன் பொற்பதி செல்லியம்பழை)
★ கிஷ்ணு (ஜோசப் செல்லையா திவாகர் செட்டிகுளம் றோட், பெரியகட்டு வவுனியா)
★ அருள்ராசா (கந்தசாமி கவிகாந்தன் 5ஆம் வாய்க்கால் பங்குளம் திருமலை)
★ ஆனந் (கிருஷ்ணபிள்ளை தவராசா கரவெட்டி)
★ எடிசன் (முருகுகுமார் 3ஆம் வட்டாரம் மண்டைதீவு திருமலை)
★ குயிலன் (துரைராசா பகீரதன் கொம்மாந்துறை வல்வெட்டித்துறை)
★ லோனோ (முல்லைநாதன் முரளீதரன் குரக்கன்புலம் புன்னாலைக் கட்டுவன்)
★ குணா (வன்னியசிங்கம் புஷ்பராசா 7ஆம் வட்டாரம் அனுக்குடியிருப்பு முள்ளைத்தீவு)
★ பிலிப்ஸ் (செல்வதிலகன் (7 ஆம் பக்கம் பார்க்க)

# நினைவு கூருகின்றோம்...

## 1991-07-26

1983 ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறையில் காடையர்களால் தாக்கப்பட்டு இதே தினத்தில் வைத்தியசாலையில் மரணமடைந்த
❋ சி. சிவானந்தராஜா (எல். பி. 3 மூதூர்)

1987 ஆம் ஆண்டு சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய
காந்தி (கார்த்திக் - கண்டி)

அச்சுவேலியில் சிறிலங்காப் படையினரின் எறிகணைத் தாக்குதலால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

1988 ஆம் ஆண்டு மட்டுவில் தெற்கில் இந்தியப் படையினருடனான நேரடி மோதலில் வீரமரணமெய்திய
கண்ணன் (நமசிவாயம் சற்குணராசா - பெருங்குளம்சந்தி, சாவகச்சேரி)

1989 ஆம் ஆண்டு நயினாதீவில் சிறிலங்கா கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழ் இளைஞர்கள்

இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட அல்வாய் சின்னத்தம்பி மகாவித்தியாலய ஆசிரியர்

அம்பனையில் தேசவிரோதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட எமது ஆதரவாளர்
கனகரத்தினம் ரவீந்திரன் (தெல்லிப்பளை)

பருத்தித்துறை ஓராம் கட்டைப் பகுதியில் இந்தியப்படையினரின் நடவடிக்கையில் கொல்லப்பட்ட 15 தமிழர்கள்

சுதுமலையில் தேசவிரோதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்

1990 ஆம் ஆண்டு கலுகலேரியில் சிறிலங்காப் படைகளுடனான நேரடி மோதலின் போது வீரமரணமெய்திய
அரி (அழகையா - அளவெட்டி)

மயிலிட்டியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய
லெப். அன்ரனி/ஹமீத் (சின்னத்துரை இராசசிங்கம் - அச்சுவேலி தெற்கு)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

❋ மேற்குறிப்பிட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர். இவரது பெயர் நேற்றைய பத்திரிகையில் தவறுதலாகப் பிரசுரிக்கப்பட்டுவிட்டது.

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B- 2855)

# மலிவு விற்பனை

❋ காஸ்குக்கர்கள் ❋ பிளான்டர் & மிக்சிகள் ❋ சுவர்க்கடிகாரங்கள்
❋ மின்சாரகுக்கர்கள் & அயண் ❋ கேற்றில்கள் ❋ தையல்மெசின்கள்
❋ மின்சார விசிறிகள், வேறும்பல வீட்டுப்பாவனைப் பொருள்கள் யாவும் உடனடியாக மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.

வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.

ஜெயா ஏல விற்பனைப் பகுதி

## நவநீதம்

161, பிரதானவீதி – யாழ்ப்பாணம். (B/2859)


# ஈழநாதம்

## வெள்ளி மஞ்சரி

எங்கள் இளைஞரிடம் இலட்சியம் - தியாகம் - வீரம் - மனவுறுதி ஆகிய வலமைகள் இருக்கின்றன. இவற்றை எந்தப் "பீரங்கியாலும்" உடைத்துவிட முடியாது. ஆதலால் நாம் வெல்வோம்

தலைவர் பிரபாகரன்





## கற்பதற்காய்...

பன்னிரண்டு வயதினிலே பால்வாயும் வதனத்தான்
பற்றெல்லாம் அறுத்துவிட்டான் - பைபிசியின கவிதைகளால்
கல்வியிலே தூனியன் காவியங்கள் இவனறிவான்
பள்ளியிலே இலவசககல்வியிலே - திரிபுற்ற காவியங்கள்
வால் நுழையாவோணான்கள்

இலவசப்புத்தகத்தில் இலவசமாய் சேர்த்த கதை
எங்களின் கிராமத்தில் தினசரியும் கூட்டங்கள் தீராத
கண்டனங்கள்

ஐம்பத்தேழுமுதல் இதுவேதான் தொடரும் கதை
ஆனபயனொன்றுமில்லை அடியேனறிந்தவரை

ஆனாலும் ஒளிக்கீற்று அடியேனுக்கிவன் தந்தான்
பார்புகழ வாழ்வதற்கு ஏட்டுக் வேண்டியவன்
பார்மீது தமிழ்காக்க ஆயுதங்கள் ஏந்திவிட்டான் - புரிகிறதா?
கற்பதற்காய் போராடப் புறப்பட்டான் வீரமகன்.

— சு. கபூர்




இந்தியப் படையின் வதை முகாம், காங்கேசன்துறையிலுள்ள அந்த முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போராளிகளையும், ஆதரவாளர்களையும் அப்பாவிப் பொதுமக்களையும் உறவினர்கள் சந்திக்க அனுமதிக்கப்படுவது உண்டு. இது எப்போதும் என்று சொல்ல முடியாது. வெளியே இராணுவம் முறையாக அடிவாங்கினால் அதை இங்கேதான் பழிதீர்ப்பதுண்டு. மாதக்கணக்காக உறவினருடனான சந்திப்பை தடைசெய்வதுமுண்டு. சந்திக்கவரும் உறவினர்களை கடுமையாகச் சோதனைக்குட்படுத்துவர் இந்தியப் படையினர். ஒரு சமயம் தேங்காயை உடைத்துக்கூட வெடிகுண்டைத் தேடினார்களென்றால் சோதனையின் முறை எப்படி என்று புரிந்துகொள்ளலாம். அப்படியான முகாமிலேதான் தடுத்து வைக்கப்பட்டிருந்தான் ஹீரோ ராஜ்.

வைத்தியத்திற்காக தமிழகம் சென்ற அவன் அங்கே பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு இந்திய தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறை வைக்கப்பட்டிருந்தான். நித்திரையில் இருந்த இவனையும் இவனது தோழர்களையும், இவர்கள் தங்கியிருந்த வீட்டிற்கு வீட்டுக் காவலுக்காக அனுப்பப்பட்ட பொலிஸாரையும் தட்டி யெழுப்பிய விசேட படைப்பிரிவினர் பொலிஸ் நிலையத்துக்கு போய்விட்டு வரலாம் வாருங்கள் என்று கூட்டிக்கொண்டு சென்றனர் அங்கிருந்து சைதாப்பேட்டை நீதிமன்றத்துக்கு



கப்டன்

### ஹீரோராஜ்

கொண்டுசென்று, அங்கே அமைதிக்குப் பங்கம் விளைவித்ததாக குற்றம்சாட்டப்பட்டு சென்னை மத்தியசிறைக்கு அனுப்பப்பட்டனர். 14 நாட்கள் இவ்வாறு காவலில் வைக்கப்படுவார்கள் என்று இவர்களுக்கு நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. நித்திரையிலிருந்தபடி எவ்வாறு அமைதிக்குப் பங்கம் விளைவித்தோம் என்று தெரியாது சிறையில் இருக்கையில், சென்னையில் இருந்த புத்த விகாரைக்கு குண்டுவைக்கப் போனார்கள் என்ற கதையொன்றைக் கூறி தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தடுத்துவைத்திருக்கும் உத்தரவைப் பெற்றனர் இந்தியப் பொலிஸார்.

எம்மை விடுதலை செய்ய வேண்டும் அல்லது ஈழத்தில் போராடிக்கொண்டிருக்கும் எமது தோழர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து தளபதி கிட்டு உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கப்போவதாக அறிவித்ததும் உண்ணாவிரதம் ஆரம்பிப்பதற்கு முதல் நாளே விடுதலை செய்வதாகக்கூறி தமிழீழத்திற்கு கொண்டுவந்தனர் இந்தியப் படையினர்.

காங்கேசன்துறையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பது எந்த நாட்டுச் சட்டத்தின்கீழ் என்பது எவருக்கும் புரியவில்லை. ஏனெனில் இந்தியாவின் சாதாரண சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டதும் அமைதிக்குப் பங்கம் விளைவிப்பதாகக் கூறப்பட்டது; பின்னர் விகாரைக்கு குண்டுவைக்கப்போனதாக இந்திய தேசிய பாதுகாப்புச்சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டதாக கூறப்பட்டது; இப்போது தடுத்துவைக்கப்பட்டிருப்பதோ தமிழீழ மண்ணில். தமிழீழ மண்ணை ஆக்கிரமித்துக்கொண்ட சிறிலங்காவின் அதிகூடிய சட்டமான பயங்கரவாதத் தடைச் சட்டம்கூட இங்கு செல்லுபடியாகாது அந்தச் சட்டம் என்றால்கூட மரணதண்டனையோ, அல்லது இவ்வளவு காலம் உங்களுக்கு சிறைவாசம் என்றோ ஒரு தீர்ப்புக் கிடைக்க வாய்ப்பு உண்டு. எதுவுமே இல்லாமல் எந்தச் சட்டத்தின்கீழ் தடுத்துவைக்கப்பட்டிருக்கிறோம்?, எமக்கு விடுதலை கிடைக்குமா? கிடைக்காதா? என்ற நிலை. ஆனாலும் நம்பிக்கையுடன் இருந்த போராளிகளில் ஒருவனாக இருந்தான ஹீரோ ராஜ்.

அதனால்தான் இவன் அந்த முகாமுக்குள்ளேயே தனது உளவு வேலையை ஆரம்பித்தான். அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தோருக்கான சமையல் வேலைகளை தினசரி மேற்கொள்பவர்களில் ஒருவனாக தன்னை இணைத்துக் கொண்டான் இவன். அந்த முகாமுக்கு பொறுப்பான மேஜரின் அலுவலகத்திற்கு பின்னாலேயே சமையல் பகுதிக்கான இடம் ஒதுக்கப்பட்டிருந்தது: சமையல் செய்யும் பாவனையில் அங்கு யார் வருகிறார்கள்? என்ன பேசுகிறார்கள்? வெளியில் என்ன நிலைமை உண்டு? என்பதையெல்லாம் இவனால் அறிய முடிந்தது. அறியும் தகவல்களை உரிய இடத்திற்கு அனுப்புவதும் இவனைப் பொறுத்தவரை அப்படியொன்றும் சிரமமான காரியமாக இருக்கவில்லை. ஒவ்வொரு புலனாக்குக்கும் அனுப்ப வேண்டிய தகவல்களை சாப்பாடு எடுக்கவரும் போராளிகளின் கையில் இரகசியமாகத் திணிப்பது. இரண்டு புளொக்குகளுக்கும் இடையே தகவல் பரிமாறும் தபால் அலுவலகமாக சமையலறையை பயன்படுத்துவது இவை எல்லாம் ஹீரோவின் பொறுப்பில்தான்.

இவனாலும் இவனது குடும்பத்தவரையும் தாய் மொழியுடன் சிங்களம், ஆங்கிலம் இரண்டு மொழிகளிலும் சரளமாகப் பேச முடியும். உத்தியோக காரணமாக கொழும்பில் அவர்கள் தங்கியிருந்த தமிழ் மொழிக்கும் குடும்பத்தினருக்கு அத்துபடி, இவன் கூட சிங்கள மொழியில்தான் கல்வி கற்றான். தமிழைப் பேசுவானே தவிர எழுதத் தெரியாது. றேடியோவில் பாட்டுப் போடும்போது தனக்குப் பிடித்தமான பாட்டு வந்தால் "நல்ல பாட்டு" என்று கூறிவிட்டு அதை சிங்களத்திலேயே எழுதுவான். "டேய் நீ ஒண்டில் சிங்களவனாயிரு; இல்லாட்டி தமிழனா இரு. உனக்கென்னடா சேட்டை" என்று சீண்டும் அவனது தோழர்களிடம் "பாருங்கோ உங்களைவிட நான் தமிழில கெட்டிக்காரனா வாறன்" என்று சூளுரைப்பான். அந்தப் பெரிய உடம்பைக் கொண்டு ஆனா, ஆவன்னா என்று எழுதிக் கட்டிப் படிக்க இவன் வெட்கப்படவில்லை. அதன் பயனாக விடுதலையடையும் காலத்தில் தமிழிலேயே கவிதை எழுதக்கூடிய ஆற்றலைப் பெற்றிருந்தான்.

பெற்றோரை சந்திக்க அனுமதிக்கப்படும் சந்தர்ப்பங்களில் ஹீரோவினதும் பெற்றோரினதும் உரையாடல் வித்தியாசமானதாக இருக்கும் தமிழில் உரையாடல் ஆரம்பிக்கும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## போராட்டம் நடத்திடு

நாட்டின் விடுதலைக்கு நமதுயிரை
நாம் அளிக்க வேணடுமெனின்
நாட்டினிலே புரிகின்ற வேட்டைபோல்
காடையர் செய்கின்ற பாதகத்தை
படடெனவே பாய்ந்து சென்று
பாடையிலே போடடெரிக்கப்
போராட்டம் நடத்தியொரு
புதிய மண்ணை அமைத்திடுவோம்.

-ஹீரோ

(சிறையினுள் தமிழ் கற்ற ஹீரோ எழுதிய கவிதை)

# நம்பிக்கைப் பயணம்

சிறுகதை

செம்மலையான்

''ஈழ விடுதலைக்கான இறுதிப்போர் தொடங்கிவிட்டது; இளைஞர்கள் அனைவரும் முழு நேர யுத்தத்துக்கு தயாராகுங்கள்; குடும்பஸ்தர்கள் துணைப் படையில் சேருங்கள்; துணிவற்றவர்கள் உங்கள் உடமைகளை அந்நியனிடம் பறிகொடுப்பதா அல்லது துணிவை வரவழைத்துக் கொள்வதா என்று சிந்தித்து முடிவு செய்யுங்கள்; நான் மேடைப்பேச்சு நடத்துவதாக கருதிவிடாதீர்கள்; உங்களது தாய் மனைவி, பிள்ளைகளை காக்க, மண்ணினை மீட்க, ஆயத்தமாகுங்கள்; இன்று ஒருநாள் உங்களுக்கு சிந்திக்க அவகாசம் தருகின்றேன்'' என்று அந்த தளபதி பேசிக் கொண்டிருந்தார்.

சிறியகிராமமாயினும் சிங்களக் காடையரதும், சிப்பாய்களதும் ஆக்கிரமிப்பை எதிர்நோக்கும் கிராமங்களில் அதுவும் ஒன்று. மக்கள் கூடும் சந்தைக்கட்டடத்தில் இக்கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. பாடசாலைமாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சமூகநலன்விரும்பிகள், வேலையற்று அலையும் இளைஞர்கள் எனப் பலதரப்பட்டவர்களும் அங்கே கூடிநின்றனர். அந்த தளபதியின் உணர்வுள்ள பேச்சு பலரை சிந்திக்கவைத்தது. துணைப்படையில் சேருவதற்கான பெயர்பட்டியல் உடனே தயாராக தொடங்கியது. பலர் முந்தியடித்துக் கொண்டு தமது பெயர்களைப் பதிவுசெய்து கொண்டனர். தளபதியின் முகம் மலர்ச்சி கொண்டது. ''இளைஞர்கள் இன்று சிந்தித்து நாளை பயிற்சிக்கு புறப்படத்தயாராகுங்கள்'' என்று கூறி கூட்டத்தை முடித்துக் கொண்டார்.

இளைஞர்கள், மாணவர்கள், பலவாகிய ஆண்கள் அனைவரிடமும் ஒருவித சுறுசுறுப்பு காணப்பட்டது. வீதி ஓரங்களையும், மரநிழல்களையும் பொழுதுபோக்கு நிலையங்களாக்கிய சில இளைஞர்கள் மெல்ல நழுவத்தொடங்கினர். மாணவர்கள் பலர் ஆங்காங்கு கூடிநின்று குசுகுசுத்தனர் அவர்களிலும் சிலர் அங்கிருந்து விலகினர். ஒரு நாளுண்டு; நாளைநான்குமணிவரை சிந்தித்து முடிவுசெய்வாம் எனஉறுதி அனைவரும் கலைந்தனர். துணைப்படையில் சேருவதற்கான பட்டியல் மட்டுமே முழுமையாக தயாராகியிருந்தது.

மறுநாள் காலையில் பாடசாலைக்குள் நுழைந்த தணிகாசலமாசிரியர் மாணவர்கள் மத்தியில் ஒருவித பரபரப்பு இருப்பதை அவதானித்துக் கொண்டார். பாடபோதனைக்காய் உயர்தர வகுப்புக்குள் நுழைந்த அவரை மாணவர்களின் கேள்விக்கணைகள் பலஎதிர்நோக்கின. ''சேர் இம்முறை A/L பரீட்சை நடக்குமா?, பாடசாலைஒழுங்காக நடைபெறுமா? இங்கும் பாடசாலைமீது விமானங்கள் குண்டு வீசுமா? இராணுவம் எமது பகுதிக்குள் நுழைந்துவிடுமா? நாம் புலிப்படையில் சேர்ந்துஅடிபட்டு நிலைமை சரிவந்தால் கல்வியை தொடர இயக்கம் அனுமதிக்குமா?'' என ஒன்றன்பின் ஒன்றாகக் கேள்விகளை கேட்கத் தொடங்கினர். தட்டிக்கழிக்காது அவர்களின் கேள்விக்குபதில் கொடுத்தேன்.

'பரீட்சை நடப்பதென்பது சாத்தியமற்றதொன்றாகும். அப்படி நடந்தாலும் சிறந்த பரீட்சை பெறுபேறுகளைப் பெறுமளவிற்கு பரீட்சை எழுதும் மனோநிலை மாணவர்களுக்கு இருக்கின்றதா என்பது சந்தேகம், யாழ்ப்பாணப் பகுதிகளில் பலபாடசாலைகள் குண்டுவீச்சுக்கு இலக்காகியிருக்கின்றன. இத்தம் அது நடைபெறமாட்டாதென்பதற்கு என்ன உத்தரவாதம்; போராட்டம் இன்றோ நாளையுடனோ முடிந்து விடப்போவதொன்றல்ல; அனைவரும் ஆயுதம் தூக்கும் நாள் என்று வருமோ அன்றுதான் விடுதலைக்கானமுடிவு கிடைக்கும்; அத்தகைய ஒருநிலையில் நீங்கள் உங்கள் கல்வியைத் தொடர இயக்கம் நிச்சயம் அனுமதிக்குமென நம்புகிறேன் நீங்கள் பரீட்சை எழுத துடிக்கிறீர்கள் ஆனால், கிழக்கு சகோதரர்களின் கல்வி நிலை பற்றி சிந்தித்தீர்களா?, இந்த மண் உங்களுடையது; இந்த கிராமம் உங்களுடையது; உங்கள் தம்பி தங்கையராவது சுதந்திரமாக கல்விகற்கவேண்டாமா? நாளைசிங்களசிப்பாய்கள் உங்கள் கிராமத்துள் நுழைந்து கண்முன்னாலேயே உங்களது தாய் தமக்கையரை துன்புறுத்துவதை பார்க்க விரும்புகின்றீர்களா? உங்களுக்கு கிடைக்காத சுதந்திரத்தை, நிம்மதியை, மகிழ்ச்சியை உங்களின் எதிர்கால சந்ததிக்காவது ஏற்படுத்திக் கொடுங்கள்'' என்று அமைதியாக ஆனால் உறுதியாக பதிலும் விளக்கமும் கொடுத்தார் தணிகாசலமாசிரியர்.

பாடசாலையிலிருந்து வீட்டுக்கு திரும்பிய தணிகாசலமாசிரியரின் மனதில் ஒரு வித அமைதி நிலவியது. மாணவர்கள் களத்தில் குதிக்கப்போகின்றார்களென்ற உண்மை அவரது மனக்கண்ணில் தெரிந்தது. ஏற்கனவே பல பிள்ளைகளை இயக்கத்துக்கு அனுப்பியவர் என்று பெற்றோரின் சீற்றத்துக்கு ஆளாகியிருந்தார். அதற்காக அவர் பயமோ கலக்கமோ அடையவில்லை. ஒரு ஆசிரியனுடைய கடமையைத்தான் அவர் செய்திருக்கின்றார்; சுதந்திரமான சமத்துவம் நிறைந்த சமூகத்தை உருவாக்கி கொடுப்பதில் ஆசிரியரின் பங்கு முக்கியமானது என்பதில் அவருக்கு அசையாத நம்பிக்கை. வெறுமனே அரச ஊழியத்துக்காய் கோழைகளை உருவாக்க நினைக்கும் ஆசிரியனாக அவர் இருக்க விரும்பவில்லை.

பாடசாலைவிட்டு வீடு திரும்பும் பாதையில் தணிகாசலமாசிரியரின் தாய்வீடு இருப்பதால் அங்கு சென்று விடு செல்வது அவரது வழமை. அவரின் தாயுடன் எஞ்சியிருப்பது ஒரு தம்பியும் தங்கையும் மட்டுமே. தம்பி கருணா யாழ். பல்கலைக்கழகத்தில் முதலாண்டு மாணவனாக இருந்தான் விடுமுறைக்காக வீட்டுக்கு வந்திருந்தான். நேற்றையதினம் நடைபெற்ற அந்த தளபதியின் பேச்சு கருணாவையும் பெரிதும் பாதித்திருந்தது. அதனால் தாயிடம் களத்துக்குச் செல்ல அனுமதி கேட்டிருந்தான் முதலில் ஒரு மகனை இராணுவ முகாம் தகர்ப்பொன்றில் கொடுத்த தாயாதலால் பதில் ஏதும் பேசாது நீண்டநேரம் மௌனமாக இருந்தாள். மௌனத்தின் முடிவில் சில வார்த்தைகள் அவளது வாயினின்றும் வெளிவிடப்பட்டது 'உன்னை நான் தடுக்கவில்லை; எல்லாப் பிள்ளைகளையும் இறுதிவரை படிக்கவைத்தேன்; எல்லோரும் தகுதியுடனும், தம்குடும்ப பாரத்துடனும் இயன்றவரை இயக்கப் பணிகளில் ஈடுபடுகின்றனர்; ஒரு கொண்ணன் இராணுவ முகாம் தகர்ப்பில் போய்விட்டான்; நீயும் படிப்பு முடிந்து இயக்கத்துக்குச் சென்றால் உன்னைப் படிக்கவைக்கவில்லையேயென்ற கவலை எனக்கிருக்காது; ஆனால், உன் விருப்பம் எப்படியோ அப்படியே செய்' என்றார். கருணா கதிரைக்குள் காலைப் போட்டுக்கொண்டு நீண்ட மௌனத்துடன் எதையோ ஆழமாக சிந்தித்துக் கொண்டிருந்தான் நேற்றைய கூட்டத்தில் கொடுக்கப்பட்ட காலக்கெடுவிற்கு ஒரு மணித்தியாலமே இருந்தது.

தணிகாசலமாசிரியரின் கடைசிமகன் பாரதி அப்பாச்சியோடு ஒட்டு அதிகம். நான்கு வயதை எட்டிய அவன் தணிகாசலத்தார் பாடசாலைக்கு செல்லும் போது சைக்கிளில் ஏறிவிடுவான் 'எங்கே போகிறாய்' என்று கேட்டால் 'அப்பாச்சிவீட்டுக்கு' என்றுபதில்வரும். பாடசாலை விட்டு திரும்பும் போது தான் அவனையும் வீட்டுக்கு அழைத்துச் செல்வார். அதுவரை அப்பாச்சியுடன் தான் அவனதுபொழுதுபோகும். அவரும் தன்மறைந்தமகன்கௌசிகனின் நிழலைபாரதியில் கண்டு கொண்டார். இன்றும் அங்கு நின்ற பாரதி கருணா சித்தப்பாவின் மௌனத்தைப் பொறுக்காதவனாய், ''சித்தப்பா! சித்தப்பா! நான் ஒரு பாட்டுப்பாடி காட்டட்டுமா?'' என்று கருணாவின் கழுத்தை இருகைகளாலும் கட்டிப்பிடித்தவாறே கேட்டான். 'சரிபாடு' என்றான் கருணா, ''அழுகுரல்கள் கேட்கிறதே அகதிமுகாம் போலும். அங்கு அழுத குழந்தை நாளைவந்து புலிகளுடன் சேரும்; சேரும்.'' என்று தன் மழலை மொழியில் பாடினான் அவனது பாடல் கருணாவின் மனதில் இறுதி முடிவை உணர்த்தியதால் கதிரையினின்றும் எழுந்து விரைவாக வெளியேறினான். ''புலிகளை சாய்த்தாலும் ஏந்தும் துவக்குகள் சாயாது'' என்று பாரதி உரத்த குரலில் பாடிக் கொண்டிருப்பது கருணாவின் காதுகளில் மெதுவாககேட்டுக் கொண்டிருக்க நடந்துகொண்டேயிருந்தான்.

நான்கு மணியளவில் நேற்றையதினம்பேசியதளபதிஇராணுவ வண்டியொன்றுடன் சந்தைகட்டடத்தடியில் நின்று கொண்டிருந்தார். இருபது இளைஞர்கள் வரை வண்டியைச் சுற்றி நின்றனர், அந்த சிறிய கிராமத்தின் இளைஞர்களில் பெரும்பகுதி அவர்களெல்லாம் அவற்றினுள்ளும் பாதிப்பேர் உயர்தர வகுப்பு மாணவர்களாக காணப்பட்டனர். சில நிமிடநேரத்தில் அனைவரும் வண்டியுள் ஏறினர். அவர்களுள்ளே மிக உயரமாக கருணா காட்சியளித்தான். வண்டி பாசறை நோக்கி புறப்படத் தயாராகியது; பலர் வாழ்த்துக்கள்கூறி வழியனுப்ப வந்திருந்தனர். கருணாவின் அண்ணனுமாகும் அங்கு நின்றிருந்தனர். கருணா தன் அண்ணனிடம் சில வார்த்தைகள் பேசினான். 'அம்மாவிடம் சொல்லுங்கோ கவலைப்பட வேண்டாமென்று; நீங்கள் அம்மாவைக் கவலைப்படாது பார்த்துக்கொள்ளுங்கள்; சித்தப்பா புலிகளுடன் சேர்ந்துவிட்டாரென்று பாரதியிடம் சொல்லுங்கள்.' தணிகாசலமாசிரியரின் நெஞ்சில் இனம்புரியாத வேதனை ஏற்பட்டது. பல்கலைக்கழகப் படிப்பையும் மறந்து புறப்படும் தன் தம்பியின் உணர்வுகளை நினைத்தபோது பெருமிதமேற்பட்டது. வண்டி புறப்படத் தொடங்கியது. 'சேர்; போய்வருகின்றோம்; போய்வருகின்றோம்' என்று மாணவர்கள் கையசைத்து கூறிய வார்த்தைகளையும் நெஞ்சில் சுமந்து கண்ணீர் மல்க மௌனமாக நின்றார் தணிகாசலமாசிரியர்.



கவிதை

## நாளை கனவுகள் கௌரவிக்கப்படும்

★ தேசம்
எங்கள்
சுவாசம்
தீயினால்
எங்கள்
தேகம் தான்
கருகும்!
உயிர் சொல்லும்
உரிமை,
நம் ஈழத்தின்
நாளை
கிடைக்கும்!

★ அடடா!
விழித்து விட்டது
இந்த விளக்கு!
விலகுகிறது
சோக இருட்டு!

★ வேங்கைகளின்
இரத்தம்
தமிழீழ நந்தவனத்திற்கு
விடப்படுகிறது!

★ இங்கே -
சலசலக்கும்
இலைகள்
புதிய சரித்திரம்
ஜனிப்பதற்கு
சாமரம் வீசுகின்றன!

★ சிந்தும் குருதியில்
சிவக்கும் பூமி!
கிழக்கை
கிழித்தெழும்
சூரியனுக்கு
ஒளி கொடுக்கிறது!

★ அடிக்கடி
எதிரியின்
ஆக்கிரமிப்பு கரத்தினால்
அரித்தெடுக்கப்படும்
என் இனிய ஈழத்தின்
எல்லையில் அமர்ந்து
எழுதுகிறேன்...

'இன்று -
கனவுகளில்
வர்ணமாக உதயமாகும்
தமிழீழம்,
நாளை
நிஜமாகவே
மொட்டவிழ்க்கும்
அப்போது
என் கனவுகள் கூட
கௌரவிக்கப்படும்!

★

வவுனியா திலீபன்

# தமிழீழத்தின் நேதாஜி

# மாமனிதர்

ஆ. இராசரத்தினம்

எளிமை, அடக்கம், ஓயாத உழைப்பு, இலட்சியப் பற்று என்பன இந்தத் தூய இலட்சியவாதியின் மிக நல்ல பண்புகளாகும். விரிந்த நெற்றியில் விழுந்திருக்கும் சிந்தனைச் சுருக்கங்கள் — நிறைந்த சிரிப்பு — ஒளிவீசும் கண்கள் — ஒல்லியான உடம்பு — திண்ணிய உள்ளம் இவற்றுடன் தமிழ், தமிழினம், தமிழ்ஈழவிடுதலை பற்றிய எண்ணங்களுடனேயே வாழ்ந்து வந்தார் திரு. ஆ. இராசரத்தினம் அவர்கள்.

இந்தக் கூற்று 1976ல் திரு ஆ. இராசரத்தினம் அமரரான போது நிகழ்ந்த அஞ்சலிக் கூட்டத்தில் அவரது நண்பர் ஒருவரின் விபரணமாகும்.

இயல்பாகவே மொழி பற்றும், இனப்பற்றும் கொண்டவரான திரு இராசரத்தினம் அவர்கள் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்டவர் — 1956ல் சிங்களம் மட்டுமே அரசகரும மொழி என்ற சட்டம் வந்ததைத் தொடர்ந்து அவரது இனவிடுதலை பற்றிய ஈடுபாடு அதிகரித்தது. 1956 முதல் 1961 வரை இலங்கைத் தமிழரசுக்கட்சியிலே சேர்ந்து கொண்ட அகிம்சைப் போராட்டங்கள் அனைத்திலும் திரு இராசரத்தினம் ஈடுபாடு காட்டியிருக்கிறார்.

அரசாங்க ஊழியராகப் பணியாற்றிய வேளையிலும் தமிழர்களின் உரிமைக் குரலை ஓங்கி ஒலிக்கச் செய்வதற்கான 'மொழிவழித் தொழிற்சங்கம்' அமைக்கப்படல் வேண்டும் எனக் கருதிச் செயற்பட்டவர். இதனால் 'தமிழ் அரசாங்க எழுதுவினைஞர் சங்கம்' என்ற அமைப்பின் முன்னோடியாகவும் செயற்பட்டார்.





உண்மைத் தொண்டராக — விசுவாசம் மிக்க உழைப்பாளியாக விளங்கிய திரு. இராசரத்தினம் அவர்கள் தமிழீழமடங்கிலும் நடைபெற்ற அகிம்சை வழிப்போராட்டங்கள் இராணுவ அடக்குமுறையால் முறியடிக்கப்பட்டதைக் கண்டு உள்ளம் கொதித்தார். வரலாற்றின் கசப்பான அனுபவங்கள் தந்த படிப்பினைகளால் அகிம்சை வழிப்பட்ட போராட்டங்களில் நம்பிக்கை இழந்து மென்முறைப்போக்கை கைவிட்டார். அரசுக்குச் சொந்தமான பேருந்துகளுக்குத் தீ வைப்பதில் தொடங்கி அரச உடைமைகளை நாசமாக்குவதன் மூலம் தமது இனத்தின் உள்ளக்கொதிப்பை — கோபக்கனலை எடுத்துக்காட்டுவதில் முன்னின்றவர்; முனைப்புடன் ஈடுபட்டவர்.

இவ்வாறாக சிங்கள ஏதேச்சாதிகார ஒடுக்கு முறையிலிருந்து தமிழீழத் தாயகம் விடுதலை பெற வேண்டும் என்ற உன்னதமான நோக்கத்தை மனதில் இருத்தி, எழுபதுகளிலும் அதற்கு முன்பாகவும் தூய பணியாற்றியவர்களில் திரு. ஆ. இராசரத்தினம் அவர்கள் குறிப்பிடப்பட வேண்டியவர் ஆகிறார்.

"இலங்கை மீண்டும் எரிகிறது" "Why Tamils Need a Nation" என்பன போன்ற நூல்களை எழுதி தமிழ் மக்களின் பிரச்சினையை உலகின் மனச்சாட்சிக்கு முன் எடுத்துரைக்கப் பாடுபட்டவர் திரு. இராசரத்தினம் அவர்கள்.

தொய்வு நோய் ஏற்படுத்தும் அவதி ஒருபுறமும், பசிப்பிணி ஒருபுறமும், மனைவி, குழந்தைகள் பற்றிய கவலை மற்றொரு புறமுமாகத் தாக்கிய போதிலும் சோர்வடையாமல் தளர்ச்சியின்றி தமிழின விடுதலைக்காகப் பணியாற்றிய திரு இராசரத்தினம் அவர்களின் வாழ்க்கை பல்வேறு படிப்பினைகளைத் தருவதாகும். குறிப்பாக தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைமைப் பீடத்தினரின் துரோகத்தனத்திற்கு திரு. இராசரத்தினம் அவர்களின் கடைசிக்கால வாழ்க்கை ஒருசாட்சியமாகும்.

"நண்பர்களால் ஏமாற்றப்பட்டேன், தலைவர்களின் உதாசீனத்தையும், கோழைத்தனத்தையும் கண்டறிந்தேன், கண்டனம் செய்தேன்" என 1973ல் ஏப்ரல் 24ல் தனது நாட்குறிப்பில் திரு. ஆ. இராசரத்தினம் அவர்கள் எழுதியிருப்பது ஒருசிறு சான்று.

ஆனால் எழுபதாம் ஆண்டுகளின் தொடக்கத்தில் இந்தியாவின் தமிழ் நாட்டிற்கு சென்ற திரு ஆ. இராசரத்தினம் அவர்கள் தமிழ்நாட்டுத் தலைவர்களோடும், கட்சிகளோடும் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு 1972ஆம் ஆண்டிலேயே தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களை தமிழகத்திற்கு அழைத்துச் சென்று தலைவர்களையும், பத்திரிகையாளர்களையும், சந்திக்கவைத்து தமிழ் நாட்டுக்கு தமிழீழப் பிரச்சினையை அறிமுகம் செய்வதற்கு காரணகர்த்தாவாக விளங்கினார் என்பது மிகவும் கூர்ந்து கவனிக்கத்தக்கது.

1973 மார்ச் 15இல் யாழ்ப்பாணம் பண்ணைப்பாலத்திற்கருகே அன்றைய சிறிலங்கா அரசின் கைக்கூலி அமைச்சரான குமாரசூரியர் சென்ற காரை குண்டுவைத்துத் தகர்க்க முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரால் திரு ஆ. இராசரத்தினம் பொலிசாரால் தேடப்பட்டார். பொலிசாரின் விரித்தவலைக்குள் சிக்காமல் எப்படியோ தப்பி தமிழ் நாட்டிற்குச் சென்றார். தமிழீழ விடுதலையை வென்றெடுப்பதற்காக ஆயுதம் ஏந்திப் போராடக்கூடிய கட்டுப்பாடான ஒரு புரட்சிகரமான இயக்கத்தை கட்டி எழுப்பும் ஆவலில் தீவிரமாகச் செயற்பட்டவர். திரு. இராசரத்தினம் அவர்களின் நாட்குறிப்பில் இருந்து சில பகுதிகளை இங்கு காணலாம்.

## 1973 ஏப்ரல 21

எமது இனம் சுய உரிமை பெற வேண்டுமானால் பலாத்காரப் புரட்சிதான் ஒரேவழி. இதற்காக எனது உயிரையும் தியாகம் செய்வதற்குத் தயாராக இருக்கிறேன், இவ்விடயத்தில் எனது மனம் உறுதியடைந்து கொண்டு வருகிறது"

## 1973 மே 6

ஐம்பதினாயிரம் தமிழ் இளைஞர்களைக் கொண்ட விடுதலைப் படை அமைக்க வேண்டுமென தீர்மானித்தேன் இவர்களின உடைக்கு ஒரு நிறம்.

தமிழீழத்தில் ஆயுதப் புரட்சியை தமிழர்கள் ஏற்படுத்தாது விட்டால் நமது இனம் அழிந்து விடும் எனக் கருதிய அவர் இதற்குரிய வழிவகைகளை வகுப்பதற்காக மற்றைய நாடுகளில் நடைபெற்ற யுத்தங்களின் வரலாறுகளைக் கவனமாகப் படித்து வந்தார். Rebels என்ற நூலை வாசித்துப் பார்த்ததிலிருந்து அதைப் போன்ற ஒரு இயக்கத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமெனத் திட்டம் இட்டிருந்தார்.

இந்த வேளையிலேயே தமிழ் மாணவர் பேரவையின் அமைப்பாளர்களில் ஒருவரான சத்தியசீலன் கைதானதைத் தொடர்ந்து தமிழ் மாணவர் பேரவை அமைப்பு சீர்குலைந்து உறுப்பினர்களில் பெரும்பாலானோர் தலைமறைவாகியிருந்த நிலையில் தமிழகம் சென்றிருந்த வே. பிரபாகரனும் இராசரத்தினமும் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

தமிழ் மாணவர் பேரவை அமைப்பு சீர்குலைவிற்குப் பின் தலைமறைவானவர்கள் மீண்டும் இயங்குவதற்குத் தயங்கி நின்ற வேளையில் தமிழீழ விடுதலைக்காக ஒரு கட்டுப்பாடான விடுதலை அமைப்பை ஏற்படுத்தும் முயற்சியில் இறங்கியிருந்த பிரபாகரனுக்கு இராசரத்தினம் அவர்களின் தொடர்பு புதிய நம்பிக்கையை ஊட்டியிருந்தது. ஆங்கிலத்திலிருந்து பல வேறு நாட்டு விடுதலை இயக்கங்களின் வரலாறுகளையும் இராணுவ அமைப்புக்குத் தேவையான பல செய்திகளையும் தமிழில் மொழி பெயர்த்தார் திரு. இராசரத்தினம் அவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னோடி இயக்கமான "புதிய தமிழ்ப் புலிகள்" இயக்கம் என்ற பெயர் சூட்டப்படுவதற்கு திரு. இராசரத்தினம் அவர்களின் ஆலோசனை மூலகாரணமாக அமைந்திருந்தது.

இந்திய சுதந்திரப் போராட்டத்திற்காக — நாட்டை விட்டுத் தப்பி வெளிநாடு சென்று விடுதலைப்படையை அமைத்துப் போராடி வீரமரணமடைந்தவர் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் அவர்கள். அதுபோலவே தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்காக இலங்கையிலிருந்து தப்பி தமிழ் நாட்டுக்குச் சென்று தமிழீழ விடுதலைக்குப் போராட ஒரு ஆயுதப்படையை அமைக்க வேண்டும் என்ற ஆவலில் செயற்பட்டுவந்தவர் ஆ இராசரத்தினம் அவர்கள். தமிழ் நாட்டிலேயே அவர் தன்னுயிரை ஈந்து விடவும் நேரிட்டது. மறைந்த திரு. ஆ. இராசரத்தினம் அவர்கள் தமிழீழ மக்களால் தமிழீழத்தின் நேதாஜி என்று என்றென்றும் நினைவு கூரப்படுதல் பொருத்தமானதே. அவர் கனவுகண்ட தமிழரின் தேசிய இராணுவ அமைப்பு என்பதும் தமிழீழ விடுதலைப் போராட்டம் என்பதும் கண்முன்னான நிகழ்வுகளாக மாறியிருக்கும் இவ்வேளையில் அவரது நினைவைத் தூண்டுதல் உண்மைத் தொண்டன் ஒருவருக்கு வழங்கப்படும் கௌரவம் ஆகும்.

விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் எடுத்த முத்தமிழ் விழாவில் தமிழீழத் தேசிய விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட மாமனிதர்களில் ஒருவரான திரு ஆ. இராசரத்தினம் அவர்கள் பற்றிய ஒரு குறிப்பை இங்கே தருகிறோம். மறைந்த திரு. இராசரத்தினம் அவர்களின் புதல்வியர் இருவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்களாக இருந்து வருகிறார்கள். தமிழீழதேசிய தலைவர் திரு வே. பிரபாகரனுடன் இயக்கத்தின் ஆரம்ப காலத்தில் திரு ஆ. இராசரத்தினம் அவர்கள் மிக நெருக்கமான தொடர்பைக் கொண்டிருந்தார்.

# பகிர்ந்து கொள்ளப் பின்நிற்காதவர்

## மறைந்த மாமனிதர் இராசரத்தினத்தின் மனைவியுடன் ஒரு சந்திப்பு

சாவகச்சேரிப் பகுதியில் சண்டி வீதியிலிருந்து பிரிந்து செல்லும் ஒரு ஒழுங்கைக்கு உள்ளிருக்கும் மறைந்த இராசரத்தினம் அவர்களின் வீட்டுக்கு ஒரு காலை வேளையில் சென்றேன். தென்னை மரங்கள் வரிசையாக நாட்டப்பட்டிருந்தன. ஒழுங்கையிலிருந்து சுமார் நூறு யார் வரையில் உட்புறமாக அமைந்திருந்தது வீடு.

அவ் வீட்டில்தான் மறைந்த இராசரத்தினம் அவர்களின் பாரியார் தங்கி இருக்கின்றார். ஈழநாதம் வாசகர்கள் சார்பாக தங்களைச் சந்திக்க வந்திருக்கிறேன் என்றுகூறி என்னை அறிமுகப்படுத்திப் பேச்சைத் தொடங்கினேன்.

மறைந்த உங்கள் கணவரின் அரசியல் கொள்கைகள் செயற்பாடுகள் பற்றி நாமறிவோம். ஆனால் அவரது குடும்ப வாழ்வு பற்றியும், அவரது குணாதிசயங்கள் பற்றியும் கூற முடியுமா?

அவர் எதற்குமே கோபிக்க மாட்டார். அது அவரது இயல்பு. எப்பொழுதும் பார்க்க மேலான நிலையில் இருப்பவர்களைப் பார்த்துப் பெருமைப்படுவதைவிட, எம்மைவிடவும் கஷ்டப்படுபவர்களை நினைத்து திருப்திப்படுவதே மேலானது என்னும் எண்ணம் கொண்டவர். அத்துடன் தேடிச் சேர்த்து வைக்க வேண்டும். அதாவது சொத்துச் சேர்த்துவைக்க வேண்டும் என்ற மனப்பாங்கு அவருக்கு இல்லை. அவர் எப்போதும் தன்னிடம் இருப்பவற்றைப் பயனுள்ள வகையில் மற்றையவர்களோடு பகிர்ந்துகொள்ளப் பின்நிற்காதவர்.

அவரது அரசியல் ஈடுபாடு பற்றி நீங்கள் எப்போது அறிந்து கொண்டீர்கள்?

61 ஆம் ஆண்டின சத்தியாக்கிரகப் போராட்டம் முடிவு பெற்ற சில காலத்தின் பின்னரேயே எங்கள் திருமணம் நடந்தது. ஆதலால் அவரது அரசியல் ஈடுபாடுபற்றி முன்னரேயே எனக்குத் தெரியும். எனினும் 1968 ஆம் ஆண்டின் பின்னரேயே அவர் தீவிர ஈடுபாடு காட்டத் தொடங்கினார் குறிப்பாக கே. டீஸ் வரன் வழக்கு தொடர்பான பிரச்சினைகளுக்குப் பின்னர் அவர் தீவிர அரசியல் போராட்டத்தின்பால் படிப்படியாக ஈர்க்கப்பட்டார். சத்தியசீலன், உட்படப் பல இளைஞர்கள் எங்கள் வீட்டுக்குவந்து சந்தித்துச் சென்றுள்ளனர். சத்தியசீலன் பொலிசாரால் கைதாகிய பின்னர்தான் இவர் தலைமறைவாகி இந்தியா செல்லவேண்டியதாகியது.

உங்களுக்கு எத்தனை குழந்தைகள் உள்ளனர்? அவர்களின் தற்போதைய நிலை என்ன? என்பது எனது அடுத்த கேள்வியாகியது.

அவருக்கு மூத்த மனைவிக்கு ஒரு மகன் உள்ளார். அவர் ஜேர்மனியில் தற்போது வசிக்கிறார். திருமணமாகிய அவருக்கு இரண்டு குழந்தைகளும் உண்டு. மற்றும் எங்களுக்கு மூன்று புதல்வியர்கள் உள்ளனர். அவர்களில் மூத்தவர் - ஒரு மகள் - கனடாவில், தன் கணவனுடன் வசித்து வருகின்றார். ஏனைய இரண்டு பெண் பிள்ளைகளும் இயக்கத்தில் உள்ளனர் எனப் பதில் அளித்தார்.

அவரது சகோதரர்கள் தாய் தந்தையர் பற்றி ஏதும் கூற முடியுமா?

குடும்பத்தில் மூத்தபிள்ளை இவர்தான். இவருக்கு இரு தம்பியர் உண்டு. ஒருவர் ஏற்கனவே மரணமாகிவிட்டார் எனக் கூறிக்கொண்டு இருந்தபோது தேநீரைக் கையில் எடுத்தபடி வந்தவரை எனது மகள் என்று அறிமுகம் செய்தார் பலாலியில் சிறிலங்கா இராணுவ முகாமுக்கு முன்பாக கடமையில் ஈடுபட்டபோது காயம்பட்ட அவர் சுமார் நான்கு மாத சிகிச்சைக்குப் பின்பு இன்னும் பூரணமாகக் குணமடையாத நிலையில் தத்தித்தத்தி கவீர் நடைபயின்றுவந்து தேநீரைத் தந்தார்.

உங்களது அப்பாவைப்பற்றி ஏதும் கூறமுடியுமா? என்று அவரிடம் வினவினேன்.

நான் பிறந்தது 1965 ஆம் ஆண்டில். அப்போது கொழும்பில் இருந்தோம். சிலகாலத்தின் பின்னர் இங்கு வந்துவிட்டோம். அப்பாவைப் பற்றிய ஒரு நிழலுருவம்தான் எனது மனத்திரையில் உள்ளது ஏனெனில் குழந்தைப் பிராயத்தைக் கடந்த நினைவு ஏற்படுத்தும் சூழலில் அப்பா எங்கள் குடும்பத்துடன் இருக்கவில்லை. ஆனால் அப்பாவின் பூதவுடல் கொண்டுவரப்பட்டு இறுதிச் சடங்குகள் நடந்த நிகழ்ச்சி என் மனத்திரையில் பதிவாகியுள்ளது என்றார் அவர்.

மறைந்த இராசரத்தினம் பற்றிய நினைவுகளை மீட்டிய போது சுமார் பதினைந்து இருபது வருடங்களுக்கு முந்திய நிகழ்ச்சிகளை நினைத்துக்கொண்டாலோ என்னவோ திருமதி இராசரத்தினம் அவர்கள் அடிக்கடி தமது கண்களைத் துடைத்துக் கொண்டிருந்தார்.

# நான் போராளியானது காலத்தின் தேவை

இப்போது ஆனையிறவு -கட்டைக்காட்டுப் பகுதி வரை நடைபெற்று வரும் போரில் காயமடைந்து சிகிச்சை பெறுவரும் ஒரு போராளியின் உடமைகளில் கண்டெடுக்கப்பட்ட நாட்குறிப்பில் இருந்து சில பகுதிகளை எமது வாசகர்களுக்குத் தருகிறோம்.

தனது தந்தைக்குத் தான் தெரிவிக்க விரும்பியவைகளைக் குறித்து வைத்திருக்கிறான் இவன். இது போராளியனது உள்ளக்குமுறல் அவனின் நம்பிக்கையின் வெளிப்பாடு.

அத்துடன் மேலும் சில குறிப்புகளைக் குறித்து வைத்திருந்தான் அவற்றில் சில வரிகளின் பொன்மொழிகளை போராளியின் உறுதியினை வெளிக்காட்டுவன அவற்றையும் அப்படியே தருகிறோம்.

06 - 01 - 91

அன்பின் அப்பா,

நான் வீட்டிற்கு வரும் போது என்னுடன் நீ சந்தோஷமாகக் கதைப்பதில்லை. ஏன் நீ கதைப்பதில்லை என்று எனக்குப் புரிகிறது நான் போராடப் புறப்பட்டதாலேயே நீ என்னுடன் சந்தோஷமாகக் கதைப்பதில்லை.

அப்பா நான் ஒரு போராளியானதில் என்ன தப்பு? இது காலத்தின் தேவை. இன்று எத்தனையோ இளைஞர்கள் எத்தனை தவறுகளை செய்துகொண்டு தெருவில் திரிகிறார்கள். அவர்களை அவர்களது பெற்றோர் வீட்டைவிட்டுக் கலைப்பதில்லை. ஆனால் நாங்களோ இந்த மண்ணையும் மக்களையும் காப்பாற்றுவதற்காக இரத்தம் சிந்துபவர்கள். அப்படியிருந்தும் எம்மை எமது ஒரு சில பெற்றோர் ஏசுகின்றனர்.

ஒருவேளை நீ நினைக்கக்கூடும், எமது குடும்பம் இவ்வளவு வறுமையிலிருக்கும் போது ஏன் எனக்கு இந்த வேலை என்று? அதற்கும் பெரிய காரணமுண்டு. அப்படி நாம் படுகின்ற வேதனைகளுக்கும், கஷ்டங்களுக்கும் இன்று நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் சமூக அமைப்பே காரணமாகும். இந்த சமூக அமைப்பு மாற்றி அமைக்கப்படும்போது எமது வறுமை போன்ற துன்பங்கள் நீங்கி புதிய வாழ்வு தோன்றும்.



ஓர் இளைஞன் எழுந்த மானத்தில இயக்கத்தில் இணைவதில்லை அவன் எல்லாவற்றையும் தெரிந்துகொண்டு, தெளிவான நிலையில் தான போராட்டத்தினுள் இணைகிறான் என்பதற்கு இப்போராளியின் கடிதம் நல்ல உதாரணம். அத்துடன் இது ஒரு போராளியின் மன உணர்வுகளை அவர்கள் எவ்வளவு நம்பிக்கையுடன் காத்தில் நிற்கிறார்கள் என்பதை அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றது.

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணித்
தலைவர்
கோ. மகேந்திரராசா

எமது சந்ததியுடன் இந்த துன்பநிலை போகட்டும்; நாம் அழிந்தாலும் பரவாயில்லை. எமது அடுத்த சந்ததியாவது புது யுகத்தில், புதிய சமுதாயத்தில், புது வாழ்வு வாழட்டும்.

இந்த நிலையிலே நாம் ஒன்றை புரிந்துகொள்ளவேண்டும். நாம் போராடுவது எமது தேசிய விடுதலைக்கு மட்டுமல்ல எமது சமூகத்தில் இன்றுள்ள அவலங்களையும், குறைபாடுகளையும் அகற்றி புதிய சமூக மாற்றமும் வேண்டி நாம் போராடுகின்றோம்.

இதற்கு நான் மட்டும் விதிவிலக்காக இருக்கக்கூடாது. எனது கடமையை நான் நிச்சயமாக செய்யத்தான் வேண்டும்.

இதற்கு என்னைப் பெற்ற நீயும் ஒத்துழைக்க வேண்டும் என்னை பெற்ற நீயும் பெருமைப்பட வேண்டும்.

இப்படிக்கு
மகன்.

1- 01- 91

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

2- 01- 91

"சுதந்திரம் எனது பிறப்புரிமை"

3- 01- 91

விடுதலை ஆத்மார்த்தமானது அது என்னிடம் இருந்து யாராலும் பிரித்து விட முடியாது

சிறைக்கூடங்களும், சித்திரவதைகளும் என்னைச் சிதைத்துவிடாது. மாறாக சிறையுண்டு கறுகிய வட்டத்துள் உழன்று கொண்டிருக்கும் என இதயத்தை விடுதலையின் பக்கத்தை நோக்கி விரைவுபடுத்தும்.

28- 02- 91

"முழங்காலில் இருந்து வாழ்வதை விட நின்று கொண்டு சாவதே மேலாகும்."

3- 07- 91

எதிரியின் விமானத் தாக்குதல் எமது மனோவலிமையை உடைப்பதற்காகவே.

6- 07- 91

நடக்கப்போகும் சண்டை இதுவரை நடைபெறாதது. இது ஒரு பலப்பரீட்சை. நிச்சயமாக இதில் பல இழப்புகள் ஏற்படும் அதைக் கண்டு நாம் அஞ்சப்போவதில்லை. இந்தச் சண்டையில் நிச்சயமாக எதிரி தனது முழுப்பலத்தையும், மூலவளங்களையும் பயன்படுத்தி முறியடிக்கப் பார்ப்பான். இவற்றை நன்கு உணர்ந்து கொண்டுதான் நாம் சண்டைக்குத் தயாராகின்றோம். கடல் தாக்குதல் நிச்சயமாக கடுமையாக இருக்கும். அவற்றை எதிர்கொள்ள வேண்டும். இந்தக்கடற் பகுதி எதிரிக்கு நல்ல பரிச்சயமானது. குழுத்தலைவர்கள் வீரமரணமடைந்தால் சிதறாமல் தொடர்ந்து சண்டை பிடித்தல் வேண்டும்.


உலகம் முழுவதுக்குமான

DHL WORLDWIDE EXPRESS

துரித
# தபால் சேவையை

நாம் நடாத்திவருகின்றோம்.
எமது புதிய முகவரியில்
உங்கள் கடிதங்களை ஒப்படையுங்கள்

DHL INTERNATIONAL
C/o. COSMOS MARKETING SERVICES,
120, K. K. S. Road, JAFFNA.
(B-2853)


## விழுதுகள்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

இடையில் ஆங்கிலத்தில் தொடரும். இந்த உரையாடல்களில் சாதாரணமான விஷயங்களே பேசப்படும். கடைசியாக சிங்களத்தில் உரையாடல் நடக்கும் இயக்கத்துக்கு அவன் தெரிவிக்க வேண்டிய விடயங்களும் இயக்கத்திலிருந்து போராளிகளுக்கு தெரிவிக்கப்பட வேண்டிய விடயங்களும் இதற்குள் இடம் பெற்றுவிடும். முகாமுக்கு வெளியேயுள்ள நிலைமைகள் பெற்றோரும், முகாமினுள்ளே உள்ள நிலைமைகளை போராளிகளும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் தெரிவித்து விடாமல் இருப்பதற்காக தமிழ் இராணுவத்தினர் ஒருவர் அங்கே குந்தியிருப்பார் அவருக்கும் காது குத்தி விட்டுத்தான் இத்தனையும் நடக்கும்.

இவனிடம் தனிப்பட்ட ஆற்றல்கள் பல நிறைந்திருந்தன. வானொலி தொலைக்காட்சி போன்றவற்றை திருத்தும் ஆற்றல், ஓவியம் வரைதல் போன்றவை அவற்றுள் சில.

இவன் மிகவும் மென்மையானவன். ஒருநாள் முகாமுக்கு எதிரேயுள்ள பொலிஸ் நிலையக் காணியில் இருந்த பட்ட பனை மரத்தில் இருந்து கிளிக்குஞ்சொன்றைப் பிடித்து வந்தனர் இந்திய இராணுவத்தினர். அதனது இறக்கைகளைப் பிடுங்கினர். (அங்குள்ள போராளிகளைப்போல) அதை ஒரு கூண்டில் வளர்த்தனர். தாய்க்கிளி குஞ்சைத் தேடித் தவித்தது. இராணுவத்தினரிடம் அனுமதிபெற்று இவன் கூட்டுடன் கிளியைக்கொண்டு போய் வேலியில் தொங்க விடுவான் தாய்க்கிளி பறந்துவந்து கூட்டிற்குள் இருக்கும் குஞ்சுக்கு இரையூட்டும். அதை அவன் வேதனையுடன் பார்த்துக் கொண்டிருப்பான். அந்தக் காலத்தில் போராளிகள் பெற்றோரைச் சந்திப்பது தடை செய்யப்பட்டிருந்தது.

வவுனியாவில் கைதிகளைக் கோட்டை விட்டு விட்டார்களாம் அதனால்தான் இங்கு இறக்கிப் பிடிக்கிறார்களாம். தாய் குஞ்சுக்கு இரையூட்டும் அந்தக் காட்சியைப் பார்த்ததும் "எங்களுக்குத்தான் விசிறி இல்லை இதுக்காவது கிடைக்கட்டும்" என்பான்.

குஞ்சின் இறகு முளைத்து வருகிறதா என அடிக்கடி பார்த்துக் கொள்வான். ஒருநாள் இராணுவத்தினர் வேறு பக்கம் கவனமாக இருந்த போது கிளிக்குஞ்சைத் திறந்து விட்டான். அது தத்தித் தத்திப் போனது. அதனால் முழு

(7ம் பக்கம் பார்க்க)


கணனி (கொம்பியூட்டர்)

இயக்குநர்கள்

தேவை

கணனி பாடநெறியில் ஏதாவது ஒர் மொழியையாவது முழுமையாகக் கற்றுத்தேர்ச்சி பெற்ற கணனி இயக்குநர்கள் தேவை விண்ணப்பப் படிவங்களை ஈழநாதம் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி 30-07-91 ஆகும்.

(B/2837)


1-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம்
30 - 01 - 1972
வீரமரணம்
06 - 08 - 1990

திதி:
26-07-1991

பாருதி கண்ணன்
(விஷ்ணுகாந்தி கருணாகரன்)
ஆனையிறவில் ஏற்பட்ட நேரடிமோதலில்
வீரமரணமடைந்த வீரவேங்கை

நெஞ்சினில் உறுதியையும்
கழுத்தினிலே நஞ்சையும் - ஏந்தி
வந்திடும் இன்னல்களை
விருப்புடன் ஏற்ற - மாவீரரே
உமது கனவு நனவாகும் நாள்
வெகு தூரத்திலில்லை.

கருணாகரன் வீதி,
மீசாலை தெற்கு,
மீசாலை.
-- குடும்பத்தினர்

(B/2844)

திருமண வைபவ

நன்றி நவில்வு

4-7-91 வியாழக்கிழமை நடைபெற்ற எமது சிரேஷ்ட புத்திரன் திரு. ம. தேவறெஜினோல்ட் J.T யின் திருமண விழாவுக்கு சமுகம் தந்து புதுமணத் தம்பதிகளை ஆசீர்வதித்தும், பரிசில்கள் வழங்கியும் மகிழ்வித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி!

இல. 20/16, வீட்டுத்திட்டம்,
இரணைமடு,
கிளிநொச்சி. (B/2840)

இங்ஙனம்,
திரு திருமதி க மரியாபரணம் J.T
குடும்பத்தினர்.

